**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.5 |
| பெயர் | V.சசிகுமார் | நாள் | 04.01.2023 |
| தகப்பனார் பெயர் | வெங்கடாச்சலம் | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.5 குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் சூரப்பள்ளி கிராமத்தில் கடந்த 15.09.2022ம் தேதியிலிருந்து கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்காக எனக்கு அழைப்பாணை எப்போது கிடைக்கப்பெற்றது என்றால், தேதி சரியாக நினைவில்லை. ஆனால், 14.12.2022ம் தேதியில் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் ஆஜராக தேதி குறிப்பிடப்பட்டிருந்தது.

2) நில அளவை குறித்து எனக்கு சிறப்பான அறிவு எதுவும் இல்லை. சூரப்பள்ளி கிராம சர்வே எண்.252ல் மொத்தம் எத்தனை உட்பிரிவுகள் உள்ளது என்றால், 13 உட்பிரிவுகள் உள்ளது. ச.எண்.252/12ல் பூசாரிதாசன் வளவு என்ற குக்கிராமம் உள்ளது என்றால், சரிதான்.

3) மேற்படி பூசாரிதாசன் வளவு என்ற குக்கிராமத்தில் தோராயமாக சுமார் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால், சுமார் 10 வீடுகள் இருக்கும். என் முதல் விசாரணையில் ச.எண்.252/5ல் ஒரு வில்லை வீடு உள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி பூசாரிதாசன் வளவிலிருந்து சுமார் எவ்வளவு தொலை இருக்கும் என்றால், பூசாரிதாசன் வளவிலுள்ள தார் ரோட்டிலிருந்து சுமார் 150 அடி இருக்கும்.

4) மேற்படி நான் சொல்லும் தார் ரோடு எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. ச.எண்.252 க்குரிய புல வரைபடத்தில் ச.எண்.252/5ல் உள்ள நிலத்தை ஒட்டி என்னென்ன சர்வே எண்கள் உள்ளன என்றால், ச.எண்.252/4 வடக்கு திசையிலும், ச.எண்.252/6 மற்றும் ச.எண்.252/7 ஆகியவை தெற்கு திசையிலும், ச.எண்.252/8 கிழக்கு திசையிலும், மேற்குபுறம் ச.எண்.191ம் அமைந்துள்ளது.

5) ச.எண்.252/5, ச.எண்.252/6, ச.எண்.252/7 ஆகியவை சிறிய நிலப்பரப்பை அடக்கிய உட்பிரிவுகள் என்றால், சரிதான். மேற்கண்ட ச.எண்.252/6 ல் 0.01.0 ஏர்ஸ் (2.5 செண்ட்) நிலமும், ச.எண்.252/7 ல் 0.01.5 ஏர்ஸ் (3 செண்ட்) நிலமும் அமைந்துள்ளது.

6) ச.எண்.252/12–ல் உள்ள நிலத்திற்கும், ச.எண்.252/5 ல் உள்ள நிலத்திற்கும் இடையே உள்ள மொத்தம் 6 உட்பிரிவுகள் அமைந்துள்ளது. ச.எண்.252/5 ஐ ஒட்டி கிழக்கில் ச.எண்.252/8 மேற்படி ச.எண்.252/8 ஐ ஒட்டியவாறு கிழபுறம் ச.எண்.252/9 ம் அதற்கு கிழபுறம் ச.எண்.252/10 ம் அதற்கும் கிழபுறம் ச.எண்.252/11 ம் அமைந்துள்ளது.

7) ச.எண்.252/10 ல் 0.02.5 ஏர்ஸ் நிலம் (5.5 செண்ட்) நிலம் உள்ளது. ச.எண்.252/11 ல் 0.01.0 ஏர்ஸ் நிலம் (2.5 செண்ட்) நிலம் உள்ளது. ச.எண்.252/12 க்கும், ச.எண்.252/5 க்கும் இடையே சுமார் 6 உட்பிரிவுகள் உள்ள நிலையில், ச.எண்.252/5 ல்தான் நான் சொல்லியுள்ள வில்லை வீடு அமைந்துள்ளது என என்னால் உறுதியாக கூற முடியுமா? என்றால், சர்வேயரை வைத்து அளந்து அடையாளம் கண்டால் தான் உறுதியாக சொல்ல முடியும்.

8) ச.எண்.252 ல் பல்வேறு உட்பிரிவுகள் உள்ள நிலையில் நான் ச.எண்.252/5 ல் தான் வில்லை வீடு உள்ளது என தோராயமாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. சர்வேயரை வைத்து அளந்து பார்த்தால்தான் வில்லை வீடு எந்த உட்பிரிவில் அமைந்துள்ளது என சரியாக கூற முடியும் என்றால், சரிதான். ச.எண்.252/5 ல் அவ்வாறு ஒரு வில்லை வீடு இல்லை என்றால், சரியல்ல.

9) 2022–2023 ம் ஆண்டிற்குரிய நடப்பு பசலி ஆண்டு 1432 ஆகும். ஏப்ரல் மாதத்தில் இருந்து மார்ச் மாதம் வரை பசலி ஆண்டு ஆகும். பழைய பசலி ஆண்டுகளுக்குரிய அடங்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் தான் இருக்கும் என்றாலும், தற்போது நடப்பு ஆண்டிற்குரிய அடங்கல்தான் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருக்கும் என்றாலும், சரிதான்.

10) தற்போது இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் 2015–2022ம் வருடத்திற்குரியது. அதற்கு முந்தைய அடங்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளது.

11) ச.எண்.252/5, ச.எண்.252/10, ச.எண்.252/11 ஆகியவற்றில் உள்ள மாரியப்பன் என்பவரது தந்தையின் பெயர் மாரிமுத்து ஆகும்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.